Mr Kodiswaran


Registered as a NewsPaper | பக்கங்கள் 04 | விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

பாகம்: 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | பங்குனி 11 | ( 24 - 03 - 1992 ) | செவ்வாய்க்கிழமை | ஓலை 35


## பிரபாகரனைச் சந்திக்க மகாநாயக்கதேரோ ஆவல்

தலைவர் திரு. வே பிரபாகரனை சந்திக்க அஸ்கிரிய பீடாதிபதி பலபிட்டிய சிறிசித்தார்த்த மகாநாயக்க தேரோ விருப்பம் தெரிவித்துள்ளார் இவர் விரைவில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்ய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன இவருடன் மலாட்டவில்ல ஞானசேன அனுநாயகதேரோ, திலகசிறி தேரோ. ரட்கம சுதீகதேரோ. மடம்பாகம அசாஜிதேரோ ஆகியோரும் யாழ். விஜயம் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளனர் இவர்கள் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் கோ. மகேந்திரராசா, அன்ரன் பாலசிங்கம், யோகி ஆகியோரையும் சந்தித்துப் பேசவிருப்பம் தெரிவித்துள்ளனர்.

# விடுதலைப்புலிகளை அழிக்கவும் முடியாது!

# தமிழரிலிருந்து பிரிக்கவும் முடியாது

## வவுனியா கிராமம் மீது விமானக் குண்டு வீச்சு

(வவுனியா)

வவுனியா மாவட்டம் விளக்குவைத்த குளத்தில் நேற்று பகல் 11. 30 மணியளவில் விமானப்படை விமானங்கள்குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தின.

இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் இத் தாக்குதல்களை மேற்கொண்டன. இவ் விமானக் குண்டு வீச்சிற்கு சிவப்பிரகாசம் என்பவரது வீடு முற்றாக சேதமடைந்தது.

இதேவேளை பேயாடிகூளாங்குளம், செட்டிக்குளம் ஆகிய பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் குடியிருப்புகளை நோக்கி எறிகணைத்தாக்குதல்களை மேற்கொண்டுவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## மூன்று தமிழர்கள் இராணுவத்தால் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில்மூன்று தமிழர்கள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப் பட்டனர். இவர்களின் சடலங்கள் இராணுவத்தினரால் வீதியில் வீசப்பட்டன. இந்தச்சம்பவம் கடந்த வியாழனன்று நடைபெற்றது

இவர்களின் சடலங்கள் அடையாளம் காணப்படாத நிலையில் மட்டக்களப்புவைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளன.

## புலிகளே தமிழரின் பிரதிநிதிகள் என்கிறார் அமைச்சர் தொண்டமான்

(கொழும்பு)

"விடுதலைப் புலிகளை அழிப்பதென்பது தமிழ் மக்களை அழிப்பதற்கு ஒப்பானதாகும். தமிழ் மக்கள் இருக்கு வரை விடுதலைப் புலிகளும் இருக்கவே செய்வார்கள். சரியோ பிழையோ விடுதலைப் புலிகள் இயக்கம்தான் தமிழ் மக்களின் அபிலாசைகளை பிரதிபலிக்கும் இயக்கமாகும். யார் விரும்பினால் என்ன விரும்பாவிட்டால் என்ன, விடுதலைப் புலிகளே சுதந்திர விடுதலைப் போராட்ட வீரர்களாக உருப் பெற்றுள்ளார்கள்" இவ்வாறு அமைச்சர் தொண்டமான் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க வேண்டும் என தென்னிலங்கையில் ஒரு கருத்து நிலவுவதாகக் கேட்கப்பட்ட பொழுது, 'விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதென்றால் வடக்கு-கிழக்கில் உள்ள ஒவ்வொரு தமிழரையும் தோற்கடிக்க வேண்டும் ஒரு விஷயம் தெளிவாகத் தெரியவேண்டும்.

அவர் பதிலளிக்கையில் 'எமது நாடு ஒரு சுதந்திரமான நாடு. நாம் எமது தேசிய நலன்களின் அடிப்படையிலேயே எமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். மற்றைய நலன்கலெல்லாம் இரண்டாம் தரமானவை. இந்தியாவுடன் நல்லுறவை வைத்துக் கொள்வது அவசியந்

விடுதலைப் புலிகள் தான் அவர்களின் போராட்ட இலட்சியத்தில் உறுதியாக இருக்கின்றார்கள்" என்று பதிலளித்தார்

விடுதலைப் புலிகள் தவறுகளை விடுகின்றார்களே என்று கேட்டபோது "அவர்கள் தவறுகளை விடுகிறார்கள் தான். யார் அப்படித் தவறு

திதவரையில் அவர்கள் போராட்டத்திலும், செயற்பாட்டிலும் சோர்வடைந்துள்ளதோடு, தமது இலட்சியத்தையே கைவிட்டுள்ளார்கள்" என்றும் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், "எல்லோரும் சமாதானத்தைப் பற்றிப் பேசுகின்றார்களே ஒழிய உருப்படி

## குமணவில் ஓய்வூதிய வவுச்சர்கள் வந்தன

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து அத்தியாவசியப் பொருள்களுடன் புறப்பட்ட குமணக்கப்பல் நேற்று பருத்தித்துறையை வந்தடைந்தது. இதில் அத்தியாவசிய உணவுப் பொருள்களும் மார்ச் மாதத்திற்கான பென்ஷன் வவுச்சர்களும் வந்து சேர்ந்துள்ளன.

குறிப்பாக இக்கப்பலில் அரிசி, மா, சீனி பால்மா, சோப் மற்றும் வேறுசிலபொருள்களும் மார்ச் மாதத்திற்கான பென்சன் வவுச்சர்களும் வந்துள்ளதாக யாழ். அரசஅதிபர் தெரிவித்துள்ளார். (பா)

## சிவசேனா எம். எல். ஏ. சுட்டுக்கொலை

(பம்பாய்)

சிவசேனை கட்சியைச் சேர்ந்த மகாராஷ்டிரா மாநில சட்டப் பேரவை உறுப்பினரான வித்தல் சவான் நேற்று முன்தினமிரவு துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கானார்.

இராணுவத்தினரால் வீதியில் வீசப்பட்டன. இந்தச்சம்பவம் திய சாலையில் வைக்கப்பட்டுள்ளன.

## மூதூர்ப் பகுதியில் பாரிய தேடுதல்

(திருக்கோணமலை)

மூதூர்ப்பகுதியிலுள்ள அனைத்துக் கிராமங்களும் சுற்றி வளைக்கப்பட்டு அங்கு பெரும் தேடுதல் நடவடிக்கைகளை சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன

இப்பிரதேசத்தில் நேற்று மாலைமுதல் காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவு சிறிலங்கா இராணுவத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

## பாராளுமன்ற தெரிவுக்குழு யாழ். வரும் சாத்தியமில்லை

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் குறித்து ஆராய்ந்து வரும் பாராளுமன்றத் தெரிவுக்குழு உடனடியாக யாழ்ப்பாணம் செல்வதில்லை என முடிவு செய்துள்ளதாகவும் பி.பி.ஸி நேற்றிரவு அறிவித்தது.

இனப்பிரச்சினைத்தீர்விற்கு விடுதலைப் புலிகளின் நிலைப்பாடுஅவசியமெனினும், பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்குள் இருப்பவர்களில் சிலர் பலமான எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக பாராளுமன்றத் தெரிவுக்குழு ஓர் முடிவு எடுப்பதும் சிரமமான காரியமாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் பாராளுமன்ற தெரிவுக் குழு யாழ்ப்பாணம் வந்து உண்மை நிலையைக் கண்டறியுமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அனுமதி வழங்கியிருந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டைப் பகுதியில் கார் ஏற்படுத்திய பீதி

கோட்டை புகையிரத நிலையம் முன்பாக கார் ஒன்று நீண்டநேரம் கவனிப்பாரற்று நிறுத்தப்பட்டிருந்ததால் அந்தக் கார் பொலிஸாரின் சுற்றி வளைப்புக்குள்ளானது.

கடந்த வெள்ளிக்கிழமை கோட்டை புகையிரதத்திற்கு முன்பாக நின்ற காரை பொலிஸார் சுற்றிவளைத்து நிற்க, குண்டு பரிசோதனை நிபுணர்கள் காரின் கதவை உடைத்து திறந்து சோதனையிடவே மக்கள் நடமாட்டமான அந்த நேரத்தில் மக்கள் மத்தியில் பெரும் பதற்றமும் பரபரப்பும் நிலவியது.

சோதனை நடந்து கொண்டிருந்தசமயம் காரை நிறுத்தியவர் வந்து விளக்கமளிக்கவே அங்கு அமைதி நிலவியது.

## தியாகச்சுடர் அன்னை பூபதி
## நினைவஞ்சலிக்கூட்டமும் உண்ணாவிரதமும்

(யாழ்ப்பாணம்)

தியாகச்சுடர் அன்னை பூபதியின் நினைவாக அடையாள உண்ணா விரதமும் அஞ்சலிக் கூட்டமும் இன்று சாவகச்சேரி வட்டவைப் பிரிவில் மட்டுவில் தெற்கு கேடில்ஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அடையாள உண்ணாவிரதம் காலை 8-00மணி தொடக்கம் மாலை 4-00மணிவரை இடம் பெறவுள்ளது. மாலை 7-00 மணிக்கு நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெறவுள்ளது.

நினைவஞ்சலிக்கூட்டத்தில் சந்திரசேகரம், வாஞ்சிநாதன் இளவேணி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

ஒவ்வொரு தமிழரையும் தோற்கடிக்க வேண்டும் ஒரு விஷயம் தெளிவாகத் தெரியவேண்டும். அதாவது தமிழ் மக்களிடம் இருந்துவிடுதலைப்புலிகளைப் பிரித்துவிட முடியாது என்று திரு. தொண்டமான் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடன் சமரசப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இந்திய அரசுஎதிர்ப்புத் தெரிவிப்பதாக விடுக்கப்பட்ட கேள்வி ஒன்றிற்கு தரமானவை. இந்தியாவுடன் நல்லுறவை வைத்துக் கொள்வது அவசியந்தான் ஆனால், எமது தேசிய நலன்களைப் பேணுவதே அதிமுக்கியமானது' என்று குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை தமிழ் மக்களின் தலைவர்களாக அங்கீகரிக்காத பல அரசியல்கட்சிகள் இருப்பதாக குறிப்பிட்ட போது ''தமிழ் மக்களைப் பொறுத்தவரையில்

கேட்டபோது ''அவர்கள் தவறுகளை விடுகிறார்கள் தான். யார் அப்படித் தவறுகள் விடாமல் இருக்கின்றார்கள்? யாரும் விரும்பினால் என்ன விரும்பாவிட்டால் என்ன விடுதலைப் புலிகளே சுதந்திரப் போராட்ட வீரர்களாக உருப்பெற்றுள்ளார்கள். தமது இலட்சியத்தில் அவர்கள் மிகவும் உறுதியாக இருக்கின்றார்கள். ஏனைய தமிழ்க்குழுக்களைப் பொறு

னத்தைப் பற்றிப் பேசுகின்றார்களே ஒழிய உருப்படியான தீர்வுத்திட்டத்தையும் முன் வைக்கவில்லை.

தென்னாபிரிக்காவில் கூட பெரிய மன மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன ஆனால் நாங்கள் பண்பாட்டிலும் நாகரிகத்திலும் முதிர்ச்சிபெற்று நீண்ட தொரு சிறப்புமிக்க வரலாற்றைக் கொண்டபோதும் எனக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

ரான விச்தல் சவான் நேற்று முன்தினமிரவு துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கானார். பரேலில் உள்ள அவரது இல்லத்தில் புகுந்த அடையாளம் தெரியாத சிலர் அவரை நோக்கிச் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் செய்ததை தொடர்ந்து படுகாயங்களுக்கு உள்ளான அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கபட்ட சில மணி நேரத்தில் உயிர்துறந்தார்.

# மணலாற்றில் உக்கிர மோதல்;
# இராணுவத்தின் முயற்சி முறியடிப்பு

## அகோரக் குண்டுவீச்சு தொடர்கிறது

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான மோதல் நேற்றுக் காலை முதல் மீண்டும் உக்கிரமடைந்தது.

விடுதலைப்புலிகளின் எதிர்த் தாக்குதலையடுத்து கடந்த இரு நாட்களாக சற்றுத்தணிந்திருந்த மோதல்கள் நேற்றுக் காலை இராணுவத்தினர் முன்னேற முயன்ற போது மீண்டும் உக்கிரமடைந்தது.

காலை 9.30 மணியளவில் கொக்குத் தொடுவாய் 15ஆம் கட்டை என்ற இடத்தில் இருந்து சரமாரியான எறிகணை வீச்சுக்களை நடாத்தியவாறு நூற்றுக்கணக்கான சிறிலங்கா இராணுவத்தினர் முன்னேற முயற்சித்தனர். இதைத் தொடர்ந்துவிடுதலைப்புலிகள் இராணுவத்தினரை முன்னேற விடாது கடும் எதிர்த் தாக்குதலைத் தொடுத்தனர்.

இட போது இரு தரப்பினருக்குமிடையில் உக்கிரச்சண்டை மூண்டது. இச்சண்டை நேற்று மாலையும் தொடர்ந்து நடந்ததாக இறுதியாக கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றைய மோதலில் 7 புலிகள் வீரச்சாவு

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் கொக்குத்தொடுவாய் சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடன் நிகழ்ந்த உக்கிர மோதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் ஏழுவேங்கைகள்வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

நேற்றுக்காலை பதினைந்து நிமிடம் நடைபெற்ற இம் மோதலில்,

★ கப்டன் மணாளன் (சண்முகநாதன் ஸ்ரீராம் - சுழி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளிடம் சிக்கிய பயங்கர ஆயுதம்

### அரச தரப்பில் அதிர்ச்சி

(கொழும்பு)

புலிகளிடம் பின்னுலைப் பற்றடாங்கி எதிர்ப்பு பீரங்கியை இழந்தமை அரச வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது சிறிலங்கா இராணுவத்திற்கு பெரும் பின்னடைவு என்றும், டாங்கிகளை எதிர்க்க

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மக்கள் கிளர்ச்சிக்கு ராணுவத்தீர்வு சாத்தியமாகா

### - பிரிகேடியர் சிறில்பீரிஸ்

அரசியல் தீர்வு எதுவும் முன் வைக்கப்படாத நிலையில் இராணுவமோ அல்லது பாதுகாப்புப படையினரோ தனித்து ஒரு மக்கள் கிளர்ச்சியை அடக்குவது உலகின் எந்த இடத்திலும் அமைதியை ஏற்படுத்தியதில்லை என்பதை எல்லோரும் அறிவர் என்றும் கூறினார்.

மேலும் கூறுகையில்நாங்கள் திறம்படச் சமாளித்து வருகின்றோம். எனினும் புலிகள் இப்போதும் இங்கே தாக்கும் சக்தி படைத்தவர்களாகவே இருக்கின்றார்கள். அவர்கள் இங்கு ஒரு புதுவித தந்திரோபாயத்தைக் கையாளுகின்றார்கள், இங்கு இராணுவம் அமைதியோடு ஓய்வாக இருக்க முடியவில்லை. ஏனெனில் புலிகளின் பிரசன்னம் தொடர்ந்து இருக்கின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

## குண்டு வீச்சுக்களால் 10 பொது மக்கள் காயம்

(மணலாறு)

மணலாறு, முல்லைத்தீவு பகுதிகளில் தொடரும் விமானக்குண்டுவீச்சு, எறிகணை, பீரங்கித் தாக்குதல்களால் பத்துக்கு மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதல்களினால் பெருமளவு காடுகள் அழிந்துள்ளதுடன் பயிர்ச்செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. நாயாறு காடு பெரும் சேதத்திற்கு உள்ளாகியுள்ளது

இத்துடன் இப்பகுதியில் செய்கைபண்ணப்பட்ட சுமார் 2000 ஏக்கர் நெற் பயிர் முற்றாக அழிக்கப்பட்டு விட்டதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



காலத்தால் அழியாத சிரஞ்சீவியே
காலனையும் கலங்க வைத்துக்
காவியம் படைத்தவனே !


## மேஜர் ரஞ்சன்

## ( சித்தப்பா )

## [செல்வநாயகம் தயாளன்]

| | |
|---|---|
| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
| 17 | 20 |

**17 / 03 / 1968** — **20 / 03 / 1991**



## அன்பின் சித்தப்பா !

''அந்நியனுக்கு எதிரான போரைத் தொடர விரும்புவோர் என்னோடு வாருங்கள் நான் உங்களுக்கு ஊதியத்தையோ, உறைவிடவிடுதிகளையோ, உணவுப் பொருள்களையோ தருவதாகக் கூறமாட்டேன் நான் பசி, தாகம் பல வந்த அணி நடைகள், போர்கள், சாவு ஆகியவற்றையே உங்களுக்குத் தருவ தாகக் கூறுகின்றேன். உதடுகளால் அன்றி உள்ளத்தால் தன்னுடைய தாய கத்தை நேசிப்பவர்கள் என்னைப்பின்தொடருங்கள்.''

1849 ஆம் ஆண்டில் இத்தாலிய விடுதலை வீரன் கரிபோல்டி கூறிய வரலாற்றுப் புகழ் பெற்ற வாசகங்கள் இவை.

1981 இல் பண்ணைப் பாசறைப் பங்காளிகள் பாகப் பிரிவினை பெற்றுப் புதிய பாதை தேடிப்போன போது வெதும்பிய உள்ளத்தோடும். வெறுங் கையோடும் நின்ற தம்பி தன்னைப்பின் தொடரும் போராளிகளுக்கு தரக்கூடியதாயிருந்த வெகுமதிகள் இவை தவிர வேறொன்றுமில்லை.

தாயகத்தின் விடுதலையை வென்றெடுக்கப்போகும் தலைவன் இவனே என்ற திடமான சிந்தனையுடனும் தீர்க்க தரிசனத்துடனும் தம்பியைப் பின் தொடர்ந்து நடந்த போராளிகளின் பாதையிலே நீயும் சேர்ந்து நடந்தாய் எம்மினத்தின் விடுதலைக்காக இலங்கை, இந்தியா ஆகிய இரு தேசங்களுக்கும் எதிராகப்போர் புர்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டபோதும் ஏங்கிக் கலங்காது களத்திலே நின்ற ஏற்றமிகு போராளிகளுள் நீயும் ஒருவனானாய்!

எங்கள் கடல்களிலே எதிரியின் கொட்டத்தை அடக்கிட இரவும், பகலும் கண்துஞ்சாது நீ கடற்கண்ணி தயாரித்ததை நாமறிவோம். இன்று எங்கள் கடல்களை எதிரிகளின் நீர்ப்புதைகுழிகளாக மாற்றி உனது தோழர்கள் நிகரில்லாக் காவியம் படைப்பதைக் காணாது நீ களத்திலே துஞ்சி விட்டாய்.

உங்கள் அமரத்துவத் தோழர்களினதும் உங்களினதும் தியாகங்கள் எங்களுக்கு நிச்சயம் வெற்றியைக்கொண்டு வரும் என்று அன்று நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் சொன்ன வாசகங்கள் நினைவுக்கு வருகின்றன.

மக்களை நேசித்தவர்கள் மக்களால் என்றும் நேசிக்கப்படுவார்கள். மண்ணுக்காக மடிந்தவர்கள் இந்த மண்ணிலே என்றும் மறக்கப்படமாட்டார்கள். இந்த வரலாற்று நியதிக்கு எம் நெஞ்சம் நிறைந்த நீயே சாட்சியாக நிற்கின்றாய்.

விடுதலை வரலாறு வீரர்களாகக் களத்திலே வீழ்ந்தவர்களையே வாழ்த்தி நிற்கும் சிலாபத்துறையிலே சிங்களப்படையினருடன் சமராடிக் களத்திலே நீ வீழ்ந்து காலக்கணக்கிலே ஆண்டொன்று கழிந்து விட்டது சித்தப்பா !

**ஆண்டொன்று கழிந்தாலும் ஆறாது எம் நெஞ்சம்**

**மண்ணினை மீட்காது மாறாது எம் வஞ்சம் !**

**- வடமராட்சி மக்கள்**

(சி-4087)

## சிந்தனைக்கு

கெட்டவன் புனிதன்போல பாசாங்கு
செய்யும் போது மேலும் கெட்டவன் ஆகிறான்
ஃபிரான்ஸிஸ் பேர்சர்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 24-03-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

# சிறிலங்கா அணுகு முறையில் மாற்றம் எதுவுமில்லை

யாழ்ப்பாணக்குடா நாடு ஓர் இராணுவ முற்றுகைக்குள் இருப்பது போலுறதொரு நிலையிலும் பெரும்பாலும் மக்களின் சகல விதமான நடவடிக்கைகளும் இடம் பெற்ற வண்ணம் உள்ளது. பாடசாலைகளுக்குகிடையிலான விளையாட்டுப் போட்டிகள் தொடக்கம் கோவில் திருவிழாக்கள் கலை நிகழ்ச்சிகள் சமூகச்சடங்குகள் உட்பட சகல நடவடிக்கைகளும் இடம் பெறுகின்றன.

வாழ்க்கையில் யுத்தம் ஒரு பகுதியாகிவிட்ட நிலையில் மக்கள் தமது அன்றாட காரியங்களையும் சமூக கடமைகளையும் செய்வது தவிர்க்க முடியாததும் பாராட்டப்படத்தக்க தொன்றாகும். யுத்தச் சூழலில் வாழ கற்றுக் கொள்ளுதல் என்பது சிறப்புமிக்க தொன்றே ஆனால் தமிழர் மீது தொடுக்கப்பட்டுள்ள பாரிய யுத்தத்தையும் எல்லை ஓரத்தில் தொடர்ந்து மோதல் இடம் பெற்று வருகின்றது என்பதையும் பலர் எமது மண்ணிற்காக வீரமரணத்தைத் தழுவிக் கொண்டிருக்கின்றனர் என்பதையும் சிலர் மறந்து விடுகின்றனர். அத்தோடு போருக்கும் தமக்கும் சம்பந்தமில்லை என்பதுபோல் நடந்து கொள்கின்றனர்.

யாழ்ப்பாணக்குடா நாட்டில் தான் இராணுவ நடவடிக்கை நடைபெறவில்லை ஆனால் எங்கள் தமிழீழத்தின் ஒரு பகுதியை எதிரி ஆக்கிரமிக்கும் நோக்கில் சண்டை இட்டுக் கொண்டே இருக்கின்றான்.

கடந்த ஒக்டோபர், நவம்பர் மாதத்தில் இருந்து யாழ்ப்பாணக்குடாநாட்டின் மீது ஒரு பெரும்படை எடுப்பு நடைபெறப்போவதாக சிறிலங்கா இராணுவத் தரப்பு அறிவித்த வண்ணம் இருந்தது ஆனால் பெப்ரவரி மாத மத்தியில் இருந்து மிரட்டல்கள் சற்றுக் குறைந்துள்ளன. ஆனால் இடைக்கிடை நடைபெற்ற வண்ணம் உள்ளது இதேவேளை சிறிலங்கா இராணுவம் தனது இராணுவ நடவடிக்கை எதையும் நிறுத்த வில்லை. யாழ் குடா நாட்டில் மட்டும் தான் இராணுவ நடவடிக்கைகள் நடைபெறவில்லை. தமிழீழத்தின் ஏனைய பகுதியில் எங்கோ ஒரு பகுதியில் தொடர்ச்சி

# வடக்கும் கிழக்கும் விபுலானந்தரும்

விபுலானந்த அடிகளைச் சரியாக புரிந்துகொள்ள வேண்டுமானால் அவர் வாழ்ந்த சமுதாயத்தின் பிரச்சினைகளில் அவர் வகித்த பாத்திரம் என்ன என்பதை அறிய வேண்டும். அன்றைய சமூக உருவாக்கத்தில் அவர் வகித்த பங்கு எவ்வளவு என்பதை அறிய வேண்டும். அன்றைய பிரச்சினைகள் அவரிடம் எத்தகைய உணர்வலைகளை ஏற்படுத்தின என்பதை அறிய வேண்டும். விபுலானந்தரின் செயற்படுகளத்தை பிரதேச ரீதியாகவும், துறைசார் ரீதியாகவும் பிரித்துப் பார்ப்பது அவசியமானது. அப்போது தான் விபுலானந்தஅடிகளை இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

### பிரதேசரீதியான செயற்படுகளம்

கிழக்கு மாகாணம், யாழ்ப்பாணம் தமிழ் நாட்டின்சில நகர்ப்பகுதிகள் இவையே இவரது பிரதான செயற்படு பிரதேசங்களாக இருந்துள்ளன 1943இல் இருந்து சுமார் இரு வருடங்கள் இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியராக இருந்ததன் மூலம் முழு இலங்கையையும் தனது செயற்படு பிரதேசமாகக் கொண்டிருந்ததைக்காணலாம். அதேபோல் 1925இல் கண்டி, காலி, நாவலப்பிட்டி, மாத்தளை, தொப்பித்தோட்டம், பதுளை ஆகிய இடங்களுக்குச் சென்று சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார். ஆனால் இங்கு எந்தவித வேலைத் திட்டத்துடனும் அவர் நேரடியாகத் தொடர்புபட்டிருந்ததாகத் தெரியவில்லை. 1937 - 1941 வரை இமய மலைப் பிரதேசத்தில் தங்கிச் செயற்பட்டுள்ளார். அவர் அங்கும் சாதாரண மக்களுடன் தொடர்புகள் வைத்திருந்துள்ளார். ஆனாலும் அது அவரது செயற்படு பிரதேசமாக இருக்கவில்லை. இராம கிருஷ்ண மடத்தில் அதன் வளர்ச்சி தொடர்பாகவே அவர் அங்கு செயற்பட்டுள்ளார்.

ஆகவே கிழக்குமாகாணமும் யாழ்ப்பாணமும் தமிழ் நாட்டின் சில நகர்ப்பகுதிகளும் மாத்திரமே இவரின் நேரடி செயற்படு பிரதேசங்களாக இருந்துள்ளன. தமிழரசுக்கட்சியின் காலத்திற்கு முன்பு வரை அதாவது 1940களின் பிற்பகுதிவரை விபுலானந்தரைத் தவிர கிழக்கு மாகாணத்தையும், யாழ்ப்பாணக்

டங்களுக்குள் பூட்டிவைப்பது முட்டாள்தனமும், வரலாற்று துரோகமுமாகும். இவர் தமிழீழமக்களின் சொத்தாகும்.

துறைரீதியான இவரது செயற்படுகளம் சமூக சீர்திருத்தம், தமிழ் மொழிவளப் பெருக்கம் முத்தமிழ்வளர்ச்சி மானுட உளச்செழுமை என இருந்துள்ளன.

### சமூக சீர்திருத்தம்

சமூக சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையில் இவர் ஒரு புரட்சிகர சீர்திருத்த வாதி என்று அப்படியே கூறிவிட முடியாது. அவர் வாழ்ந்த காலத்தில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் முதலாளித்துவ தன்மை பெற்ற பொருளாதாரம் ஒன்று துரிதமாகத் திணிக்கப்பட்டு வந்தது. பொருளாதாரப் பரிணாமம் (படி மலர்ச்சி) ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. பிரித்தானியர்களே இந்த மாற்றத்தைப் புகுத்தி வந்தார்கள் வெளியில் இருந்தே இந்தத் திணிப்பு மேற்கொள்ளப்பட்டது. விபுலானந்தரோ, யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசோ, இராமகிருஷ்ண சங்கமோ இந்த மாற்றத்தையிட்டு எதுவும் எதிர்ப்புத் தெரிவித்ததாகத் தெரியவில்லை இந்தமாற்றத்தின் மூலம் புதியதோர் மத்திய தர வர்க்கம் துரிதமாகத் தோன்றி வளரத் தொடங்கியது. அதாவது. சமூகத்தின் ஒரு மிகக் கணிசமான பகுதியினர் மேல் நோக்கிய சமூக அசைவியக்கத்திற்கு உள்ளாகினர்கள். (Uoward Social Mobilty) இம்மேநோக்கிய சமூக அசைவியக்கத்துக்கான ஏணியாகச் செயற்படக்கூடிய புதிய பொருளாதார உற்பத்தி நடவடிக்கைகள் வடக்கு கிழக்கில் பரவலாகத் தோன்றவில்லை. தென் இலங்கையே இதற்கான களமாக இருந்தது. வடக்கு கிழக்குப் பகுதியைப் பொறுத்து கல்வி வாய்ப் பொன்றே இதற்கான ஏணியாக இருந்தது. இதனால் 1920 களிலும், 1930 களிலும் வடக்கு கிழக்கில் தோன்றிய சமூகச் சீர்திருத்த இயக்கங்கள் கல்வி சீர்திருத்த இயக்கங்களாகவே தம்மை வெளிப்படுத்திக் கொண்டன. கல்விச்

தில் இராமகிருஷ்ண சங்கத்தின் ஊடாக விபுலானந்தர் முன்னெடுத்துச் சென்ற கல்விச் சீர்திருத்த இயக்கமும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கல்விச் சீர்திருத்த இயக்கமும், ஒரே நோக்கங்கொண்டவையாய் இருந்தாலும், அவற்றின் தன்மை வெவ்வேறானது. கிழக்கிலும்விட சக்தி பெற்ற ஒரு நிலவுடைமை வர்க்கம் யாழ்ப்பாணத்தில் முதலில் பிரித்தானியர்களுடன் ஒட்டிக் கொண்டது. ஆகவே யாழ்ப்பாணக் கல்விச் சீர்திருத்த இயக்கம் காலத்தால் முந்தியது. யாழ்ப்பாண சாதி அமைப்பு மிக இறுக்கமானதாக இருந்ததனால் கல்விச் சீர்திருத்த இயக்கம் அனேக சமூக முரண்பாடுகளை உள்ளடக்கியதாய் இருந்தது அதிக அரசியல் தன்மை பெற்றதாகவும் இருந்தது

விபுலானந்தரும், யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசும் சமூக நோக்குடைய ஒரு புதிய ஆசிரியர் பரம்பரையையே தோற்றுவித்தனர். 1960 கள் வரை வடக்கு கிழக்கு மாகாணங்களின் அநேக பிரதான பாடசாலைகளின் அதிபர்களாக இருந்தது இந்த ஆசிரியர் பரம்பரையினரேயாகும்.

விபுலானந்தர் பின் பற்றிய சமூக சீர்திருத்தம் அன்றைய காலகட்டத்திற்குஅவசியமான அனைத்து சமூக பரிமாணங்களையும் உள்ளடக்கியது என்று கூற முடியாவிட்டாலும், அவர் தமிழ் பேசும் மக்களுக்கு அவசியமான ஒரு சமூக சீர்திருத்தத்தைப் பின்பற்றினார் என்பதுவும் அது புரட்சிகரமான கூறுகளைக் கொண்டிருந்தது என்பதுவும் மறுக்க முடியாத உண்மைகள்.

### தமிழ் மொழி வளம் பெருக்கம்

தாய் மொழிக் கல்வியை

முகமாகியுள்ள விபுலானந்தர் இசைத்தமிழினதும், நாடகத் தமிழினதும் வளர்ச்சிக்கு வழங்கிய பங்களிப்புக்களைப்பற்றி அநேகமாக சகலரும் அறிவர். யாழ் நூலும், மதங்கசூளாமணியும் இவற்றுள் வரலாற்றால் அழியாதவை. ஆகவே இது பற்றி இங்கு விபரம் கூறுவதைத் தவிர்த்துக் கொள்கிறேன். விபுலானந்தரை முத்தமிழ் வித்தகர் என்ற பரிமாணத்துள் மட்டும் வைத்துப் பார்க்கும் தன்மையைக் களைந்து விடுதல் அவசியம். இவ்விதமாக நோக்கும் தன்மையால் அவர் தாம் இறக்கலுக்கு உள்ளாகிறார். ஆகவே அவரை முழுமையாக இனங்கண்டு கொள்ளக்கூடிய தான ஆய்வுகள் தொடரட்டும்.

### மானுடஉளச்செழுமை

விபுலானந்தர் ஈடுபாடு காட்டிய அனைத்து துறைகளிலும் இதுவே அடிப்படை முக்கியத்துவம் பெற்ற துறையாகும். ஒருவன்தனதுஉளசெழுமையை உத்தரவாதப் படுத்திக் கொள்ளாமல் பிறரின் உளச் செழுமைக்கு முயற்சிக்க முடியாது. விபுலானந்தரை அளப்பரிய சக்தியும் நிபந்தனையில்லா அர்ப்பணிப்பும் மிக்க ஒரு திறமை சாலியாகவும், தியாகியாகவும் மாற்றியது இந்த உளச்செழுமையே தான். பின்பற்றுவோர் (Followers) இல்லையானால் எந்த மனிதனாலும் அளப்பரிய காரியங்களைச் செய்ய முடியாது. ஒரு சமூக இயக்கத்தின் அளப்பரிய காரியங்களை செய்ய முடியாது ஒரு சமூக இயக்கத்தின் கேந்திரமாக தன்னை ஆக்கிக் கொள்ள முடியாது. விபுலானந்தரின் உளச்செழுமைக் கொள்கையே அவருக்குப் பல அருமையான பின்பற்றுவோர்களையும்செயற்படுசெக்களையும் உருவாக்கிக் கொடுத்தது. சன்மார்க்க நெறியே இவரின்

> 1940 களின் பிற்பகுதி வரை, விபுலானந்தரைத் தவிர கிழக்கு மாகாணத்தையும், யாழ்ப்பாணத்தையும் தனது நேரடிச் செயற்படு பிரதேசமாகக் கொண்டிருந்த அறிஞர்கள், சமூக சீர்திருத்தவாதிகள் அரசியல் வாதிகள் வேறு எவருமே இல்லை என்று சொல்வது தவறாகமாட்டாது.

இருந்துள்ளார்.

1936- பெப்ரவரி 28 இல் இவர் 'பழந் தமிழகத்தின் சிற்பாசிரியர்கள்' எனும் பொருள் பற்றிய சொற் பொழிவைச் செய்தார் ''பாழுங் கல்வியில் ஈடுபட்ட காரணத்தால் எனது சிந்தை பாவிலும் உரையிலும் பரந்து கிடந்த அழகுடைப் பொருளை அனுபவிப்பதோடு அமையாது பிகற்றித் திரியுமாறு ஏவுகிறது'' என விபுலானந்தர் தமக்கு முருகியற் கலைகள் மீது இருந்த ஆர்வத்தை தாமாகவே வெளியிட்டுள்ளமையைக் காணலாம்.

இவையே இவரின் நாட்டத்துக்குரிய நான்கு பெருந்துறைகளாக இருந்துள்ளன. இவர் எந்தக் கட்டத்திலும் அரசியலையோ, சமூக - பொருளாதார மாற்றத்தையோ ஒரு தனித்துறையாகத் தேர்ந்தெடுத்தவரல்ல அத்துறைகளில் நேரடியாக ஈடுபடுவதில் இருந்து விலகியே வந்துள்ளார். ஆனால் இவரின் நடவடிக்கைகள் அரசியல் தன்மையற்றதாகவோ, சமூக பொருளாதாரத் தன்மையற்றதாகவோ இருந்தது என்று இதை அர்த்தப்படுத்திக் கொள்ளக் கூடாது.

தமிழ்மொழி வளப் பெருக்கம், முத்தமிழ் வளர்ச்சி ஆகிய துறைகளில் இவர் பெற்ற வரலாற்றுப் புகழ்மிக்க வெற்றிகளுக்கு இவரின் அரசியல் ஈடுபாடற்ற தன்மைதான் காரணமாக அமைந்ததா என்பது ஆய்வுக்குரிய ஒரு விடயமாகும். ஏனெனில் இத்துறைகள் அரசியலுக்கு அப்பாற்பட்ட விடயங்கள். அரசியல் நம்பிக்கைகளினதும், கட்சி பக்கச் சார்பினதும் பிடிகளுள் இத்துறைகள் எக்காரணத்தைக் கொண்டும் அகப்பட்டு விடக்கூடாது. அகப்படுமானால் இத்துறைகளின் வளர்ச்சி பாதிப்படைவது திண்ணம்.

ஆனால் கல்விச் சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையில் இதன் சில அம்சங்கள் நேரடியாகவே அரசியலுடன் தொடர்புபட்டதாகும். சில

தவது இராணுவ நடவடிக்கைகளை எதையும் நிறுத்த வில்லை. யாழ் குடா நாட்டில் மட்டும் தான் இராணுவ நடவடிக்கைகள் நடைபெறவில்லை. தமிழீழத்தின் ஏனைய பகுதியில் எங்கோ ஒரு பகுதியில் தொடர்ச்சியாக இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டே வருகிறது. கிழக்கில் ஒரே நேரத்தில் பல இராணுவ நடவடிக்கைகள் நடத்தப்பட்டு வருகின்றது. தற்பொழுது பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மணலாற்றில் தொடங்கி நடத்தி வருகிறது.

இந்த நிலையில் நாட்டில் அமைதி ஏற்பட்டுவிட்டதாகவோ சிறிலங்கா அரசாங்கம் இராணுவ நடவடிக்கைகளை கைவிட்டுவிட்டதாகவோ எவரும் கருதிவிடக்கூடாது இதேவேளை யாழ்ப்பாணம் மீதான இராணுவ நடவடிக்கையானது இராணுவத்திற்கு ஏற்பட்ட பின்னடைவுகளால் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதே ஒழிய கைவிடப்படவில்லை என்பதையும் புரிந்து கொள்ளவேண்டும் யாழ்ப்பாணத்திற்கு புலிகளைச் சந்திக்க எத்தனை நல்லெண்ணத் தூதுக்குழுக்கள் வந்து போயினும் அதற்கு அரசாங்கம் செவிசாய்த்ததாக இல்லை. நல்லெண்ணத் தூதுக்குழுக்களின் வருகையையும் அவர்களின் கோரிக்கைகளையும் பத்திரிகைகள் பிரசுரிப்பதனால் சமாதான சூழல் வந்துவிட்டதாகக் கருதமுடியாது அரசாங்கத் தரப்பு நடவடிக்கை எவ்வாறு உள்ளது என்பதே சமாதானத்திற்கான கணிப்பீட்டுக்கு உரியதாகும்.

மேலும் சிறிலங்கா அரசாங்கத்தின் சமாதானம், பேச்சுவார்த்தை என்பனவெல்லாம் வெறும் கண்துடைப்பு என்பதை நன்கு கூர்ந்து அவதானிப்பவர்கள் புரிந்து கொள்ளலாம். இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தைச் சிபார்சு செய்யுமாறு பாராளுமன்றத் தெரிவுக் குழுவை நியமித்து விட்டு ஐக்கிய தேசியக் கட்சி, எதுவித தீர்வுத்திட்டத்தையும் அதன் முன் வைக்கவில்லை. அத்தோடு ஐ. தே. கட்சி ஓர் தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டிய தேவையில்லை எனவும் அறிவித்துள்ளது. இனப்பிரச்சினையை உருவாக்குவதற்கும், அது இன்றைய நிலையை அடைவதற்கும் பிரதான காரணமாக இருந்த ஐக்கிய தேசிய கட்சி தீர்வுத்திட்டம் எதையும் வைக்க வேண்டிய அவசியம் இல்லை என அறிவித்தமை இனப்பிரச்சினைத் தீர்வை ஐ. தே. கட்சி எவ்வாறு கையாளப்போகிறது என்பதை தெளிவாகச் சுட்டிக்காட்டும் அம்சமாகும்.

அத்தோடு சிறிலங்கா அரசாங்கம் இராணுவ நடவடிக்கையை மட்டும் நடத்தவில்லை. இதற்கு இணையாக தமிழர் தாயக பூமியை துண்டாடவும், அதன் மூலமாக தமிழர் போராட்டத்தை பலவீனப்படுத்தவும் தொடர்ந்து முயற்சித்து வருகின்றது. தமிழர் போராட்டத்திற்கு எதிரான ஓர் அம்சமாக சிங்களக் குடியேற்றங்களை அமைப்பதிலும் தீவிரமாக உள்ளது. அதாவது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழி தேடுவதற்குப் பதிலாக தமிழரையும், அவர்களின் தாயகத்தையும் அழித்துவிடவும் சிதைத்து விடவுமே எண்ணுகின்றது.

அதாவது இனப்பிரச்சினை தொடர்பாகஅரசியலில் ஓர் மந்த நிலை உருவாகியுள்ளதே ஒழிய அரசியல் தீர்விற்கான தீவிரமுயற்சிகளோ, அன்றி முன்னேற்றங்களோ ஏற்பட்டதாக இல்லை. இதேவேளை இனப்பிரச்சினையில் அரசாங்கம் தனது இராணுவ ரீதியானதும், ஆக்கிரமிப்பு ரீதியானதுமான திட்டங்கள் எதையும் கைவிட்டதாகவும் இல்லை. இதனைத் தமிழ் மக்கள் அனைவரும் உணர்ந்து கொள்ளவேண்டும் போர்க்காலத்தில் உள்ள நெருக்கடிகளையும் கடமைகளையும் புரிந்து கொள்ளவேண்டும். விளையாட்டுகளும், சமூக நிகழ்ச்சிகளும் கலை நிகழ்ச்சிகளும் தேவை அற்றது என்று கூறவில்லை. ஆனால் அவற்றின் இலக்குகளை தெளிவாக வரையறுத்துக் கொள்ளவேண்டும்.

---

வரை அதாவது 1940 களின் பிற்பகுதிவரை விபுலானந்தரைத் தவிர கிழக்கு மாகாணத்தையும், யாழ்ப்பாணத்தையும் தனது நேரடி செயற்படு பிரதேசமாகக் கொண்டிருந்த அறிஞர்கள் சமூக சீர்திருத்தவாதிகள், அரசியல்வாதிகள் வேறு எவரும் இல்லை என்று சொல்வது தவறாக மாட்டாது.

இன்று பலர் விபுலானந்தரை கிழக்கின் அறிஞராகவும் கிழக்கின் நடவடிக்கைகளுடன் மாத்திரம் தொடர்புற்றவராகவும் புரிந்து கொண்டிருப்பது மிகத்தவறானதாகும். யாழ்ப்பாணத்தின் சமூக - அரசியல் வரலாற்றின் அடிப்படை அபிவிருத்திகளை ஏற்படுத்திய 1920 கள் ஒரு வரலாற்று முக்கியத்துவமிக்க தசாப்தமாகும் யாழ்ப்பாணத்தின் சமூக உருவாக்கத்தில் இந்த தசாப்தம மிக முக்கியத்துவமிக்கதாகும்.

ஆழ்ந்த செல்வாக்குச் செலுத்திய இந்த பத்து வருடங்களின் கதாநாயகர்களுள் விபுலானந்தரும் ஒருவராவார் மட்டக்களப்பில் பிறந்தார் என்ற காரணத்திற்காக இவரை மட்

கள் கல்வி சீர்திருத்த இயக்கங்களாகவே தம்மை வெளிப்படுத்திக் கொண்டன. கல்விச் சீர்திருத்த இயக்கம் மறைமுகமான அரசியல்- பொருளாதார இயக்கமாகவும் இருந்தது. யாழ்ப்பாணத்தில் நிலவிய சாதி அடக்குமுறை கல்வியின் பரவலைத் தடுக்கும் ஒரு பலமிக்க சமூக காரணியாக இருந்ததனால், இக் கல்விச் சீர்திருத்தங்கள் சாதி பேதத்திற்கு எதிராகவும் போர் தொடுத்தன. சம ஆசனம். சம போசனத்தின் சமூக உள்ளடக்கம் இதுதான். இலவசக் கல்வி, தாய்மொழிக் கல்வி, கல்வியை அரசு பொறுப்பேற்க வேண்டும் என்ன போன்ற கோரிக்கைகளின் சமூக காரணிகளும் இவைதான். ஆகவே விபுலானந்தரின் சமூக சீர்திருத்த நடவடிக்கையும் கல்விச் சீர்திருத்தத்தின் ஊடாகவே அமைந்திருந்தது

கிழக்கு மாகாணத்தில் விபுலானந்தர் இராமகிருஷ்ண சங்கத்தின் ஊடாக 36 பள்ளிக் கூடங்களை நிறுவி செயற்படுத்தினார் கிழக்குமாகாணத்

## வளம் பெருக்கம்

தாய் மொழிக் கல்வியை நடைமுறைக்குக் கொண்டு வருதல் சம்பந்தமான இவரது பங்களிப்புக்களும் தமிழ் சொல்லாக்கம் தொடர்பாக இவர் எடுத்த நடவடிக்கைகளும் இங்கு குறிப்பிடத்தக்கவையாகும். இவரின் இத்துறை ஆர்வத்தால் 1935 ஆம் ஆண்டில் இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தால் தமிழ் ஆராய்ச்சிக் குழுவில் அங்கத்தினராக நியமிக்கப்பட்டார். இவர் சென்னையில் கலைச் சொல்லாக்க மன்றம் ஒன்றை நிறுவினார். சென்னை தமிழ்ச் சங்கத்தின் உதவியுடனேயே இது நடைபெற்றது. இச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற கலைச் சொல்லாக்க மாநாட்டிற்கு தலைமை தாங்கினார். மொழிவளர்ச்சி தொடர்பான இவரின் ஏனைய பங்களிப்புகள் முன்னரேயே கூறப்பட்டு விட்டன.

## முத்தமிழ் வளர்ச்சி

ஒரு துறவியாகவும், முத்தமிழ் வித்தகராகவும் அறி

அருமையான பணிபுரியவோர்களையும்செயற்படுசக்களையும் உருவாக்கிக் கொடுத்தது. சன்மார்க்க நெறியே இவரின் மானுட உளச் செழுமைக் கோட்பாடாகும். இசைத் தமிழிலும், நாடகத் தமிழிலும் இவர் காட்டிய ஆர்வமும், இவர் ஈட்டிய சாதனைகளும் கூட இவரில் உளச் செழுமையின் வெளிப்பாடுகளேயாகும். இசையும் நாடகமும் முருகியல்(அழகியல்) அம்சங்கள் நிறையப் பெற்ற துறைகளாகும். இதன் முருகியல் தன்மைதான் இவற்றை இயற்றமிழில் இருந்து வேறு படுத்தி வைத்துள்ளது என்று கூடச் சொல்லலாம். உளச் செழுமையற்றதனால் முருகியலைச் சுவைக்கவும். இரசிக்கவும் முடியாது. அதேபோல் முருகியலைச் சுவைக்கவும், இரசிக்கவும் பழகிக் கொள்பவனுக்கே உளச் செழுமையும் ஏற்படும். விபுலானந்தர் இசைத் தமிழிலும் நாடகத் தமிழிலும் மாத்திரமல்ல அழகியல் வெளிப்பாடுகள் மிகுந்த சிற்பக் கலையிலும், ஓவியக் கலையிலும் கூட ஆர்வமுடையவராய்

இதன் சில அம்சங்கள் நேரடியாகவே அரசியலுடன் தொடர்புபட்டதாகும். சில வகை அரசியல் நம்பிக்கைகளின் செல்வாக்கிற்கு உட்பட்டதாகும். இது நிச்சயமாக முழுக்க முழுக்க ஒரு அரசியல் விவகாரமல்ல. ஆனால் அதே நேரத்தில் இது அரசியலுடன் தொடர்பற்ற அரசியலுக்கு அப்பாற்பட்ட, ஒரு விடயமுமல்ல. விபுலானந்தரை அடிக்கடி அரசியலுடன் தொடர்புபட வைத்தது இந்த நடவடிக்கையேயாகும். தமிழீழத்தில் கருக்கொள்ள ஆரம்பித்திருக்கும் கல்விச் சீர்திருத்த. தமிழ்மொழி வளர்ப்பு இயக்கங்கள் விபுலானந்தரும் யாழ்ப்பாண காங்கிரசும் விபுலானந்தரும் இராமகிருஷ்ண மடமும் கால அனுபவங்களை மீள ஆராய்வது மிக அவசியமானது.

நன்றி - யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும். (1920 களில்)

---

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை

# தொழில் விலகும் திட்டம் தொழிலாளர் புறக்கணிப்பு

சுயவிருப்பத்தின் அடிப்படையில் சேவையில் இருந்து விலகிக்கொள்ளும் திட்டத்தை காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்கள் ஏற்றுக்கொள்ளமறுக்கின்றனர்

மேற்படி கூட்டுத்தாபனத்தில் சேவையில் உள்ள ஊழியர்களை சுயவிருப்பத்தின் அடிப்படையில் சேவையில் இருந்து நீக்குவதற்குரிய சகல விபரங்களும் அடங்கிய சுற்று நிருபம் ஒன்றை அண்மையில் இக் கூட்டுத்தாபனம் வெளியிட்டிருக்கிறது. ஆனால் இச் சுற்று நிருபத்தில் தரப்பட்டிருக்கும் நியந்தனைகளின் அடிப்படையில் பதவி விலகுவதற்கு இக்கூட்டுத்தாபன ஊழியர்கள் எவரும் இதுவரை முன்வரவில்லை. இச்சுற்று நிருபத்தின்படி தமக்கு வழங்க முன்வரும் சலுகைகள் போதுமானதாக இல்லை என ஊழியர்கள் பலர்கருதுகின்றார்கள்

அதேவேளை காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாக முகாமையாளர் திரு. வி. ரீ. சிவலிங்கம் இக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலக அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக கொழும்பு சென்றிருக்கிறார். (க)

# லிபியாவை ஆதரிப்பதாக அரபுலீக் அறிவிப்பு

அமெரிக்கா, பிரான்சு விமானங்களைக் குண்டு வைத்துத் தகர்த்ததாகக் கூறப்படும் இரு லிபியர்களையும் நாடு கடத்துமாறு கோருவதை ஏற்றுக் கொள்ளமுடியாது என அரபுலீக் அறிவித்துள்ளது.

இந்த விடயத்தில் அரபுலீக் லிபியாவின்பக்கமே என அதன் பொதுச் செயலாளர் அசமத் மக்லூத் தெரிவித்தார் அமெரிக்காவின் கோரிக்கையை ஏற்றுக்கொள்வது ஒரு தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தும் என மேலும் அவர் தெரிவித்தார்.

# 27சிப்பாய்களை கைது செய்ய உத்தரவு

இராணுவத்தினர் இருபத்தேழு பேரைக் கைது செய்ய இராணுவ நீதிமன்றம் ஆணை பிறப்பித்துள்ளது.

கொலை, கள்ளக் கடத்தல், குழப்பம் விளைவித்தல், லஞ்சம் போன்ற குற்றச் சாட்டுகளின் பேரிலேயே இவர்களைக் கைதுசெய்யும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது

தேடப்படுபவர்கள் தலைமறைவாகி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் வலிகாமம் மேற்குப் பிரிவுக்கான போட்டியில் இன்று காரைநகர் இளைஞர் அணியை எதிர்த்து வளர்மதி விளையாட்டு கழக அணி விளையாடவுள்ளது. இப்போட்டி இன்று மாலை மூன்று மணியளவில் கன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மலையகத்தில்

# பொய்தகவல்அடிப்படையில் அப்பாவிகள் கைது

கடந்த பல மாதங்களாக ஊவாப் பகுதியில் நிலவும் பதற்றமான நிலைமையைச் சாதகமாகக் கொண்டு பாதுகாப்புப் பிரிவினருக்குத் தவறான தகவல்களைக் கொடுப்பதில் பலர் முனைப்பாகச் செயல்படுகின்றனர் என தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தனிப்பட்ட பகைமை வியாபாரப்போட்டிபொறாமை, வஞ்சகம் தீர்க்கும் நோக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் சிறிலங்காப் படையினருக்கு பொய்யான தகவல்கள் வழங்கப்படுகின்றன. இதனால் அப்பாவித் தொழிலாளர் பலர் கைதாகி துன்புறுத்தப்படுகின்றனர்

அண்மையில் பதுளை அட்டாம்பிட்டியவில் இரு தமிழ் இளைஞர்கள் பொய்த்தகவல் அடிப்படையில் கைது செய்யப்பட்டதாகத் தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# ஓடிக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளில் தீ

வீதியால் சென்ற மோட்டார் சைக்கிள் திடீரெனத் தீப்பற்றியது வாலிபர் பாய்ந்து தப்பினார்.

இச்சம்பவம் நேற்று யாழ் நகரப் பகுதியில் இடம்பெற்றது. மதியம் 12 மணியளவில் ஆஸ்பத்திரி வீதியால் சென்று கொண்டிருந்த இளைஞர் மோட்டார் சைக்கிளில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக மோட்டார் சைக்கிள் திடீரெனத் தீப்பற்றிக் கொண்டது தீயைக் கண்டு பயந்த வாலிபர் மோட்டார் சைக்கிளிலிருந்து பாய்ந்து தப்பிக் கொண்டார். மோட்டார் சைக்கிள் வீதியின் ஓரத்தில் நிறுத்தப்பட்டு பொதுமக்கள் தாமாக முன்வந்து தீயை அணைத்தனர். இளைஞருக்கு காயம்ஏதும் ஏற்படவில்லை.

ஈழநாதம்

# தமிழக மீனவரை உடன் விடுவிக்க நரசிம்மராவ் கோரிக்கை

## கச்சதீவை திரும்பப்பெறுவது கொள்கை விவகாரமாம்

இலங்கைக் கடற்படையினரால்கைது செய்யப்பட்ட ஏழு மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு இந்தியப் பிரசமர் திரு நரசிம்மராவ் இலங்கை அரசிற்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

இம் மாதம் பதினாறாம் திகதி இயந்திரப் படகு ஒன்றில் மீன் பிடிச்சச் சென்ற ஏழு இந்திய மீனவரை இலங்கைக்சடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக இந்தியப் பிரதமர் விடுத்த வேண்டுகோளில் இந்த ஏழு மீனவர்களும் தவறுதலாக சர்வதேச எல்லையைத் தாண்டி இலங்கைக்கடற்படையினர் கைது செய்திருந்தால் அவர்களை உடனடியாகவிடுதலை செய்ய வேண்டும் எனவும் அவர்களை மனிதாபிமான அடிப்படையில் நடாத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை இலங்கைக்கு கொடுக்கப்பட்ட கச்சதீவை இந்தியா மீளக் கோருவது முக்கிய கொள்கை கோட்பாடுகளையும், விளைவுகளையும்உள்ளடக்கிய ஒன்று என இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் கூறியுள்ளார். அக்கடிதத்தை நேற்று மாநில சட்டசபையில் முதல்வர் ஜெயலலிதா வாசித்தார்.

மேலும் கச்சதீவு விவகாரம் தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சுஆராய்ந்து வருவதாகவும் பிரதமரின்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் நாகபட்டினத்திலிருந்து காணாமல் போன மீனவர்களைத்தேடும் பணியில் வெளியுறவு அமைச்சர், சிறிலங்காவிலுள்ளஇந்தியத் தூதுவரகமும் கோரப்பட்டிருப்பதாகவும் தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்தார்.

இது தொடர்பாக கைது செய்யப்பட்ட மீனவர்கள் விடுதலை செய்யப்படும் வரை ஆயிரத்து ஐநூறு மீனவர்கள் தாம் கடலுக்குச் செல்வதில்லை என பகிஷ்கரிப்பில் சனி முதல் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை கடற்பரப்பில் நான்கு சடலங்கள் மிதந்து செல்வதாக இலங்கை கடற்படையினர் கூறியுள்ளனர் என தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று சட்டசபையில் கூறியுள்ளார்.

இதேவேளை இம்மீனவர்களைக் கண்டுபிடிக்க கடற்பரப்பில் வானூர்திகளைத் தேடுதலுக்குப் பயன்படுத்த வேண்டும் எனவும் அவர் மத்திய அரசைக் கேட்டுள்ளார்.

# தாய்லாந்து தேர்தலில் இராணுவக் கட்சி வெற்றி

(பாங்கொக்)

தாய்லாந்து தேசிய சட்டப் பேரவைக்கு நடைபெற்றதேர்தலில் இராணுவ ஆதரவுக் கட்சிகளுக்கு அறுதிப் பெரும்பான்மை வலு கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

360 இடங்களில் அவற்றிற்கு 192 இடங்களை இராணுவ ஆதரவுக் கட்சிகள் பெற்றுக் கொண்டன.

இராணுவ எதிர்ப்புக் கட்சிகள் 158 இடங்களையும் பெற்றன.

தேர்தல் முடிவுகள் வெளியானவுடனேயே இராணுவ ஆதரவுக் கட்சிகள் ஒன்றுகூடி அமைச்சரவை அமைப்பது பற்றி விவாதிக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## மாணவர் இயக்கம் அவசரக் கூட்டம்

நாளை 25 ஆம் திகதி புதன் மாலை 4-00 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் வலிகாமம் மாணவர் இயக்க உறுப்பினர்களுக்கான அவசர கூட்டம் நடைபெற உள்ளது. சகல பாடசாலைகளையும் சேர்ந்தமாணவர் இயக்க உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு வலிகாமம் பிரிவு மாணவர் இயக்கப் பொறுப்பாளர் திரு. சத்யா கேட்டுக் கொள்ளுகின்றார்.

# நெல்லின் விலை 400 ரூபா ராணுவ அதிகாரிவற்புறுந்து

(திருகோணமலை)

பள்ளிக்குடியிருப்பில் சிறியளவில் நெற்செய்கையை மேற்கொண்ட தமிழ்மக்கள் விளைவு நெல்லை நானூறு ரூபாவிற்கு தனக்கே விற்க வேண்டுமென அங்குள்ள இராணுவ அதிகாரி ஒருவர் வற்புறுத்தி வருகிறார்.

திருக்கோணமலை நகரத்தில் அறுநூறு ரூபாவிற்கு விற்கக்கூடியதாக இருந்த போதும் நெல்லை எடுத்துச்செல்ல தடைவிதித்திருப்பதால் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிலையில் அங்குள்ள தமிழர்கள் உள்ளனர்.

தனிப்பட்ட முறையில் லாபம் பெறுவதற்காகவே இந்த உத்தரவை அந்த அதிகாரி பிறப்பித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை தீபன்

[சுப்பிரமணியம் சுகந்தகுமார் (சுதன்)]

| தாயின் மடியில் | தமிழீழ அன்னையின் அணைப்பில் |
|---|---|
| 15. 07. 1974 | 04. 04. 1991 |

திதி: 24. 03. 92


# தமிழக மீனவர் விவகாரம்; சிறிலங்கா மீது கண்டனம்

இந்தியாவிற்கானசிறிலங்கா தூதுவர் நேற்று இந்திய வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டு இந்திய மீனவர்கள் காணாமல் போயுள்ள விடயம் குறித்து அவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

தொடர்ச்சியாக இந்திய மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் தாக்கப்படுவது குறித்து இந்தியா தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்தியாவின் கண்டன செய்தியொன்று சிறிலங்காஅரசுக்கு அனுப்பி வைப்பதற்கென சிறிலங்கா தூதுவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

| வீர ஜனனம் | | வீரச்சாவு |
|---|---|---|
| 11 — 03 — 1964 |  | 24 — 03 — 1987 |

# ஒன்றரைக் கிலோ அரிசிக்கு மட்டுமே அனுமதி

(திருக்கோணமலை)

ஈச்சிலம்பத்தையைச் சேர்ந்த மக்கள் நாளொன்றுக்கு ஒன்றரைக் கிலோ அரிசியை மட்டுமே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனால் நாளாந்தம் உணவுப் பொருள்களை கொள்வனவு செய்ய இருபது மைல் நடந்து செல்லவேண்டியுள்ளது.

வித்த அவர் ஒழுங்காக சேவை நடைபெறுவதில்லை என்பதனையும் ஏற்றுக்கொண்டார்.

## புலிகளிடம்

புலிகள் பாவித்துவந்த கண்ணி வெடிகள், றொக்கற்றுகள்என் பவற்றைவிட இந்த ஆயுதம் மிகப் பயங்கரமானது என்

## சுயமுயற்சி வேலைத்திட்டம்

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 16கிராமிய உற்பத்திக் குழுக்கள் நெல் மற்றும் சிறு தானிய செய்கையை சுயமுயற்சி வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொண்டு,தற்போது அறுவடையில் ஈடுபட்டு வருகின்றன.இவ் வேலைத் திட்டம் கிராமத்திலுள்ள மக்களின் கூட்டு முயற்சியால் நடைமுறைப் படுத்தப்பட்டது.என்பது

1964 

## வீரவேங்கை அல்போன்ஸ்

(தெ. செல்வச்சந்திரன்)

மண்ணின் மீட்பிற்காய்
உன் உயிரை
துச்சமென எண்ணி
கோட்டையிலே
வீரச்சாவைத் தழுவிய
என் அல்போன்சே!
உனது இலட்சியம்
நனவாக பிரார்த்திக்கின்றோம்.

செல்வச்சந்திரன் வீதி,
செட்டித்தெரு,
நல்லூர்.

பெற்றோர்,
சகோதரர், உறவினர்கள்,
நண்பர்கள்.

(2302)

## நினைவு கூருகின்றோம்

## 1992-03-24

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ். கோட்டைப்பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட கண்ணி வெடி விபத்தில் எம்மைப் பிரிந்த

**அல்போன்ஸ்** (தெய்வேந்திரம் செல்வச்சந்திரன் - நல்லூர்)

**நாகு** (இளவாலை)

1989 ஆம் ஆண்டு கிளாலியில் இந்திய இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**றோம்** (சின்னத்துரை கோணேஸ்வரன் - கச்சாய் வீதி, சாவகச்சேரி)

1991ஆம் ஆண்டு மணலாற்றில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எம்மைப் பிரிந்த

**குன்றன்** (சுப்பிரமணியம் குமாரவேல் - புளியம் பொக்கணை, கிளிநொச்சி)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/4089)

...வு செய்ய இருபது மைல் நடந்து செல்லவேண்டியுள்ளது.

இதுபற்றி கருத்து தெரிவித்த இராணுவ அதிகாரி பிரிகேடியர் சிறி பீரிஸ் தமிழர்கள் பெருமளவு பொருள்களை கொள்வனவு செய்தால் அதில் ஒரு பகுதியை புலிகளுக்கு வழங்கிவிடுவார்கள். அதனால் இவ்வாறு கட்டுப்பாடு விதிக்க வேண்டியுள்ளதாக தெரிவித்தார்.

வாரத்தில் மூன்று நாட்கள் பஸ் போக்குவரத்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக தெரி

### பெற்றுக் கொள்ளவும்

வினாசி. கதிரவேலு (38014 1183V) என்பவரது அடையாள அட்டை என். கனகலிங்கம் என்பவரால் கொம்படிப் பாதையிலிருந்து கண்டெடுமிபட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

### நேற்றைய

புரம்)

★ லெப்டினன்ட் இளமாறன் (மதிவதனன் தயானந்- திருக்கோணமலை)

★ வீரவேங்கை நிலவன் (கந்தவனம் தேவராஜா- வாகரை-மட்டக்களப்பு)

★ கப்டன் ஸ்ரீமதி (சிவகலா துரைராசசிங்கம் - ஒட்டி சுட்டான்)

★ லெப்டினன்ட் நளினி (சாந்தி செல்லையா-முள்ளியவளை, முல்லைத்தீவு)

★ வீரவேங்கை தர்சினி (வனிதா கந்தசாமி - மட்டக்களப்பு)

★ வீரவேங்கை மான்விழி (சிவகந்தை செல்வராஜா- அல்வாய்)

ஆகியோர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

வீரச்சாவடைந்த இந்த ஏழு வேங்கைகளுக்கும் விடுதலைப் புலிகள் தமதுவீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றனர்.

### விடுதலைப்

கும் ஞானோதயம் பிறக்கவில்லை. இதுமிகவும்துரதிஷ்டவசமானது'' என்றும் தெரிவித்தார்.

### பாராளுமன்ற

தமை தெரிந்ததே. புலிகளின் இந் நிலைப்பாடு ஒரு பொருத்தமான நடவடிக்கை எனவும் பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது.

[illegible] பவற்றைவிட இந்த ஆயுதம் மிகப் பயங்கரமானது என்றும், அதிசக்தி வாய்ந்தது என்றும் சிறிலங்கா சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன் ஒரு குண்டு ஒரு டாங்கியை முற்றாக தகர்த்தெறிய போதுமானது. அத்துடன்வாகனங்களில் பொருத்தக் கூடிய வகையில் இந்த ஆயுதம் அமைந்துள்ளமையால் விரைவில் இடத்துக்கிடம் எடுத்துச் செல்லப்பட்டு உபயோகப் படுத்தப்பட முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் புலிகள் டாங்கி எதிர்ப்பில் புதிய பலமொன்றைப் பெற்றிருப்பது அரச தரப்பில் பெரும் கவலையை உருவாக்கியுள்ளது. வருங்காலத்தில் டாங்கிகளை உபயோகித்து பெரும் தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டிருக்கும் இவ்வேளையில் இராணுவத்தினருக்கு பெரும் பின்னடைவு உண்டாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

### மணலாற்றில் முயற்சி முறியடிப்பு

அதேவேளை மணலாறுகாட்டுப் பகுதியில் நுழைந்த இராணுவ அணி ஒன்றின் மீது காலை 11.15 மணியளவில் விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர். இதன்போது இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் சுமார் 15 நிமிடங்கள் கடும் சண்டை நடைபெற்றது.

இராணுவத்தினருக்கு உதவியாக மூன்று குண்டு வீச்சு விமானங்கள், ஒரு வை-8 ரக விமானம் மற்றும் இரண்டு உலங்குவானூர்திகள் ஆகியன உக்கிரதாக்குதல்களை நடாத்தின.

விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதலைச் சமாளிக்க முடியாதராணுவத்தினர்கொல்லப்பட்ட இராணுவத்தினரது சடலங்களையும் தூக்கிக்கொண்டு பின்வாங்கிக்கொண்டனர்.

இம்மோதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

விடுதலைப்புலிகள் தரப்பில் ஏழு வீரவேங்கைகள் வீரச்சாவை எய்தியுள்ளனர். (க,ச)

திலுள்ள மக்களின் கூட்டு முயற்சியால் நடைமுறைப் படுத்தப்பட்டது.என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் கிராம மட்டத்தில் புதிய வேலைத் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு இத் திட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் வருமானம் பயன்படுத்தப்படவுள்ளது

## இந்தியா அதிருப்தி

பாகிஸ்தானுடன் இராணுவ ரீதியான உறவுகளை அமெரிக்கா தொடர்ந்து பேணுவது பற்றிபென்டகன்னினால் தயாரிக்கப்பட்ட இரகசிய அறிக்கை குறித்து இந்தியா தனது அதிருப்தியை வாஷிங்டனுக்கு தெரியப்படுத்தியுள்ளதென நேற்று ராஜ்ய சபாவில் பேசிய வெளிவிவகார அமைச்சர் மாதவ்சிங் சோலங்கி தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் பென்டகனினால் தயாரிக்கப் பட்டதாகக் கூறி வாஷிங்டன் போஸ்ட் இதழில் வெளியான அறிக்கை வாஷிங்டனின் உண்மையான எண்ணத்தைப் பிரதிபலிக்கவில்லை என்று அமெரிக்க வெளியுறவுத்துறைஉத்தியோகபூர்வமாக இந்தியாவிற்கு தெரியப் படுத்தியிருப்பதாகவும், இந்தியாவின் அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதில்லை என்ற நிலைப் பாட்டில் மாற்றம் எதுவுமில்லை என்றும்தெரிவித்தார்

## அமெரிக்கா உதவி

பங்களாதேஷ் அகதிகளுக்கு முப்பது இலட்சம் டொலர்களை வழங்க அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் உறுதியளித்துள்ளார்.

பர்மிய இராணுவத்தின் அடக்குமுறைகளுக்கு அஞ்சி பங்காளாதேஷ் தப்பிஓடும் அகதிகளின் நலன் கருதியே புஷ் இந்த உதவியை வழங்க முன் வந்திருக்கிறார்.

வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதிக்கும், பங்களாதேஷ் பிரதமர் காலிதாஸியாவுக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பின்போது ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் முப்பது லட்சம் டொலர்களை அகதிகளுக்கு வழங்கமுன் வந்தார்.

[illegible]

**திதி: 24. 03. 92**

தீபனே! எங்கள் குலவிளக்கே!
எல்லைகள் மீறி அந்நியர் புகுந்தால்
தொல்லைகள் சூழும் என்பதை உணர்ந்து
வல்லவர் படையில் நீயும் இணைந்து
நல்லன செய்தாய் நாட்டுக் காகவே.

தச்சன் காட்டு மண் சேறாகியது
உனது - வியர்வையால் - குருதியால்
அச்ச மின்றி நீ போர் புரிந்த கதை
அங்குள்ள மரமும் - செடியும் கூட அறியும்.

ஆண்டொன்று போனதடா - ஆனாலும்
உன் நினைவு ஆறாகப் பெருகும் - எம்
மண்ணினை மீட்கும் நாள் வரையில்
தொடரும் போரில் நீ - வரலாறாய் வாழ்வாய்.

உன்பிரிவால் வாடும்
பாசமிகு அப்பா, அம்மா.
சகோதர சகோதரிகள், அம்மம்மா
அப்பாச்சி, சித்தி, பெரியப்பா,
சித்தப்பா, மாமா, மாமிமார்,
மைத்துனர், மைத்துனிமார்
உற்றார், உறவினர், நண்பர்கள்.

'குமார கோட்டம்'
சுகந்தகுமார் வீதி,
வட்டுகிழக்கு
வட்டுக்கோட்டை.
(சி 4091)

## மரண அறிவித்தல்

### திருமதி பிலிப்பானந்தம் ஞானரத்தினம்

வயாவிளான் உத்தரியமாதா கோயிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பிலிப்பானந்தம் ஞானரத்தினம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற நடராசா பிலிப்பானந்தம் (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், யோசப் குலசிங்கம் M. A. (கனடா), காலஞ்சென்ற திரேசா மலர், றோஸ்மலர், நேசமலர், இராசமலர், குணசிங்கம் (இத்தாலி), சுபசிங்கம் (இத்தாலி), நவமலர், யுகசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், லூர்துநாயகி (கனடா), ஜெயநாதிராசா (இளைப்பாறிய நுண்கலை அறிஞர், மாநகரசபை யாழ்ப்பாணம்), லூயிஸ் அல்விறெட் (இத்தாலி), குலநாயகம் (மூறிவு, நோவு வைத்தியர்), தேவராணி (இத்தாலி), நிர்மலா (இத்தாலி), நவதுரை (பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பூபாலசிங்கம், குணரத்தினம், காலஞ்சென்ற துரைசிங்கம் (ஆசிரியர்), காலஞ்சென்ற பரராஜசிங்கம் ஆகியோரின் சகோதரியும், பொன்னுத்துரை, செல்வரத்தினம், மரியரத்தினம், திரேசம்மா ஆகியோரின் அருமை மைத்துனருமாவார். ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

[2329]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மார்ச்மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.